Tracts for Muhammadans, First Series. No. 10.

THE KORAN.

குரான்.

FIRST EDITION, 3,000 COPIES.

MADRAS:

THE RELIGIOUS TRACT AND BOOK SOCIETY.

S. P. C. K. PRESS, VEPERY.

Two Pies.] 1897. [உ பை.

முகம்மதியருக்குபயோகமான

சிறு புத்தகங்கள்.

1. சுவிசேஷத்தின் உண்மை.
2. "இயேசுவோ முகம்மதுவோ யார் நாம் நம்பத் தக்கவர்?"
3. பாவமில்லாத நபி.
4. இயேசுகிறிஸ்து.
5. இயேசுகிறிஸ்துவின் பாடுகளும், உயிர்த்தெழுதலும்.
6. இயேசுகிறிஸ்துவைப்பற்றிய தீர்க்கதரிசனங்கள்.
7. முகம்மது.
8. சத்திய இஸ்லாம்.
9. ஈசாக்கும் இஸ்மவேலும்.
10. குருன்.
11. தேவனுடைய நாமங்கள்.
12. நமாஸ்.

THE KORAN.

குரான்.

கிறிஸ்தவர்களும் முகம்மதியரும் தௌறுத், சாபுர், இஞ்சில் ஆகிய ஆகமங்கள் அல்லாவின் வாக்கு என்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். முகம்மதியர் குரானும் தேவ வாக்கு என்கிறார்கள். கிறிஸ்தவர்களோ இதை ஒப்புக்கொள்வதில்லை; இவ்விஷயத்தைச் சற்றுப் பரிசோதிப்போமாக.

குரானிலிருந்து அநேக நல்ல போதனைகளை அடையலாம் என்பதை ஒத்துக்கொள்ளுகிறோம். தெய்வம் ஒன்று; விக்கிரக ஆராதனை பாவம்; தேவனிடத்தில் விசுவாசம் வைப்பது அவசியம்; கடைசிநாளில் எல்லா மனுஷருக்கும் நியாயத்தீர்ப்பு உண்டு, அப்போது விசுவாசிகள் மோட்சத்துக்கும், துன்மார்க்கர் நரகத்துக்கும் போவார்கள் என்பதைப்போலொத்த சத்தியங்கள் குரானில் அடங்கியிருக்கிறது. காரியத்தைப் பார்த்தால் இந்த எல்லா நல்ல போதனைகளும் தௌறுத், சாபுர், இஞ்சில் என்னும் ஆகமங்களிலிருந் தெடுக்கப்பட்டன.

ஆனால் இஞ்சிலுக்கு இசையாததும் உண்மைப் பிசகுள்ளதுமான வேறு அனேக காரியங்களும் அதிலுண்டு. இந்த முகாந்தரத்தையிட்டு, குருன் தேவ வாக்கு என்பதை நாம் ஒப்புக்கொள்ளக் கூடாததாயிருக்கிறது.

நம்முடைய முதல் ஆட்சேபனை.—குருன் அல்லாவின் வாக்கு என்பதை ரூபிக்க யாதொரு அத்தாட்சியுமில்லை. ஒருவன் நம்மிடம் வந்து "நான் சொல்வதை நீங்கள் நன்றாய்க் கவனிக்கவேண்டும்; ஏனென்றால் நான் இராஜபிரதிநிதியவர்களால் அனுப்பப்பட்டிருக்கிறேன்" என்பானானால், அவ்வதிகாரியின் கட்டளையை அவன் கொண்டுவந்திருப்பது நிச்சயம் என்று நாம் அறியத்தக்கதாக அவனை ஒரு ஆதாரம் காட்டச் சொல்லுவோமல்லவா? அதைப்போலவே, "குருன் அல்லாவின் வாக்கு; அதற்கு நீங்கள் கீழ்ப்படியவேண்டும்" என்று முகம்மது என்பவர் சொல்லுகையில், அதற்கு என்ன ஆதாரம் என்று கேட்கிறோம். மூசா அற்புதங்களை அதாவது அனேக அதிசயமான கிரியைகளை நடப்பித்தார். ஆதலால் தௌறுத் அல்லாவின் வாக்கு என்று அறிகிறோம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் அவருடைய சிஷர்களும் அனேக அற்புதங்களைச் செய்தார்கள். ஆகையினால் இஞ்சில் அல்லாவின் வாக்கு என்று அறிகிறோம். அவர்களுடைய சாட்சியின் மூலமாய் சாபுரையும் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் குருன் தேவவாக்கு என்பதற்கு ரூபகாரம் என்ன? முகம்மது தான் யாதொரு அற்புதமும் செய்யவில்லை யென்பதைக் குருனில் ஒப்புக்கொள்ளுகிறார். காபிரியேல் என்னும் தூதன் அல்

லது மலக், தனக்கு அநேக தடவைகளில் காணப்பட்டு, குருனைக் கொடுத்ததாக அவர் அடிக்கடி சொல்லியிருப் பினும், அதற்கு யாதொரு அத்தாட்சியும் காண்பிக்கக் கூடவில்லை. ஒருவேளை அவர் சொப்பனத்தில் காபிரி யேல் தூதனைக் கண்டிருக்கலாம். அல்லது அந்தப் பேச்சு அபத்தமாயிருக்கலாம். ஆனால் காரியம் எப்படி யிருந்தபோதிலும், காபிரியேல் தூதன் முகம்மதுவுக்குக் காணப்பட்டான் என்பதை ரூபிக்க, அவருடைய சொந்த வாக்குமூலத்தைத்தவிர, வேறு அத்தாட்சி யில்லை என்பது தெளிவாயிருக்கிறது. குருன் தேவவாக்கு என்று அவர் சொன்னதேயொழிய, அது வாஸ்தவம் என்பதற்கு யாதொரு அத்தாட்சியும் கொடுக்கவில்லை.

குருன் புஸ்தகத்தின் வாசகநடை மிகவும் நேர்த்தியா யிருப்பதால் நாம் அதைத் தேவவாக்கென்று ஒப்புக் கொள்ளவேண்டும் என்று மோல்விகள் சொல்லுகிறார்கள். ஆனால் நாம் அதை அறிவதெப்படி? குருன் அரபிப் பாஷையில் எழுதப்பட்டிருக்கிறது; அப்பாஷை மற்ற ஜாதியாருக்குத் தெரியாது. இப்படியிருக்கையில் குருன் மெத்த நேர்த்தியாய் எழுதப்பட்டிருக்கிற தென்பதை அவர்கள் அறிவதெப்படி? அரபிப் பாஷை கற்றுத் தேர்ந்தவர்கள், வேறு அனேக அரபிப் பாஷைப் புஸ்த கங்கள் குருனைவிட மெத்த நேர்த்தியாய் எழுதப்பட்டி ருக்கிறது என்கிறார்கள். மேலும் உருது, இங்கிலிஷ் முதலிய வேறு அனேக பாஷைகளில் நூற்றுக்கணக்கான புஸ்தகங்கள் மெத்த நேர்த்தியான நடையில் எழுதப் பட்டிருக்கின்றன; அதினால் அவைகள் எல்லாம் தேவ

வாக்குகளாகுமா? ஆகையினுலே குருன் தேவவாக்கு என்பதற்கு அதின் பாஷைநடையை ஆதாரமாகச் சொல்லுதல் கூடாது. ஆதாரமாகாதவிடத்தில் நாம் அதை ஒப்புக்கொள்ளுதலும் கூடாது.

"இஸ்லாமார்க்கம் உலக முழுவதுக்காகவும் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் எல்லா மனுஷரும் அதை ஒப்புக்கொள்ளவேண்டும் என்பது அல்லாவின் கற்பனை" என்று முகம்மதிய மோல்விகள் பேசுகிருர்கள். இது மெய்யானல், இஸ்லாமார்க்கத்தைப்பற்றி எல்லா மனுஷரும் அறியக்கூடிய ஓர் ரூபகாரத்தை நிச்சயமாகவே அல்லா கொடுத்திருப்பார். அவர் இஞ்சிலை வெளிப்படுத்தியிருக்கிருர்; ஆனுல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இஞ்சிலைப் பிரசங்கித்தது மாத்திரமல்ல, அது மெய் என்பதற்கு அத்தாட்சியாக அனேக அதிசயமான அற்புதங்களை நடப்பித்தார். அந்த அற்புதங்கள் மிகவும் தெளிவும், அறிவீனருக்கும் எளிதில் விளங்கக்கூடியதுமாயிருந்தன. இயேசுகிறிஸ்து மெய்யாகவே அல்லாவின் நபியாயிருந்து, அவருடைய வார்த்தைகளையே பேசினுர்; ஏராளமான ஜனங்கள் ஈசா நபியின் மகத்துவமான அற்புதங்களைக் கண்டார்கள்; அவருடைய சத்துருக்கள் முதலாய், அவைகளை மறுக்கக் கூடாதிருந்தது; குருடருக்குப் பார்வையையும், ஊமையருக்குப் பேச்சையும், சப்பாணிகளுக்கு நடையையும், மரித்தோருக்கு ஜீவனையும் கொடுக்கக்கூடியவர், மெய்யாகவே அல்லாவினுல் அனுப்பப்பட்டவரென்றும், அவருடைய வார்த்தைகள் அல்லாவின் வார்த்தைகள்தான்

என்றும், படிப்பற்ற சாதாரண ஜனங்கள் முதலாய் அறிந்துகொள்ளக்கூடும். ஆகையினால் இஞ்சில் சத்திய மானது என்பதற்குரிய அத்தாட்சிகள், எல்லாராலும் அறிந்துணரக்கூடியது; யாவரும் யாதொரு வருத்தமல் லாமல் கண்டுகொள்ளலாம்; இந்த முகாந்தரத்தையிட்டு, இஞ்சில் எல்லா மனுஷருக்கும் உரியது என்று சொல்லு கிறோம். இஸ்லாமார்க்கத்தை எல்லா மனுஷருக்காக வும் அல்லா ஏற்படுத்தியிருப்பாரானால், எல்லாரும் அறிந்துகொள்ளக்கூடிய அத்தாட்சியையும் அவர் கொடுத் திருப்பார். ஆனால், குருன் நல்ல பாஷை நடையில் எழுதப்பட்டிருக்கிறதோ அல்லவோ என்பதை, அரபிப் பாஷை யறிந்தவர்களைத்தவிர வேறொருவரும் அறியார் கள். ஆனதுபற்றி குருன் புஸ்தகத்தின் சிறந்த பாஷை நடையைக்கொண்டு, அது தேவவாக்கு என்பதை ரூபிக் கக்கூடாது.

குருன் தேவவாக்கு அல்ல வென்பதற்கு வேறொரு நியாயமுண்டு; என்னவென்றால், அது அனேக விஷயங் களில் தௌறாத்துக்கும் இஞ்சிலுக்கும் விரோதமாய்ப் பேசுகிறது. தௌறாத்தும் இஞ்சிலும் தேவவாக்கு என்று எல்லாரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். சத்தியத்தை மாத் திரமே அல்லா பேசுவார். ஆதலால் அவருடைய வார்த்தைக்கு விரோதமானது அவருடைய வார்த்தை யல்ல, ஒரு இடத்தில் ஒருவகையாயும் இன்னொரு இடத் தில் அதற்கு எதிரிடையாயும் அல்லா பேசுகிறவரல்ல. "தௌறாத்தும் இஞ்சிலும் அனேக விஷயங்களில் தள்ளு படியாகி யிருக்கிறது; ஆகையினாலேதான் அவைகள்

குருனுக்கு வித்தியாசப்படுகிறது" என்று மோல்விகள் சொல்லுகிறார்கள். ஆனால் தள்ளுபடி என்ற வார்த்தைக்கு அர்த்தமென்ன? யாதாமொரு அரசன் முதலில் ஒரு பிரமாணத்தை விதித்து, பின்பு அதைத் தள்ளி விட்டு, வேறொரு நூதன பிரமாணத்தைக் கொடுப்பானால் அப்போது அந்த முதல் பிரமாணம் தள்ளுபடியாயிற்று என்னப்படும். இது வெகு சாதாரணமாய் நடக்கிற காரியம்; இதைப்போலவே அல்லாவின் சட்டங்களில் சிலதும் நிறுத்தப்பட்டிருக்கின்றன. பலி முதலான அனேக காரியங்களைக் கைக்கொள்ளும்படி அவர் யூதர்களுக்குக் கற்பித்திருந்தார்; கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வந்தபொழுதோ, இந்தக் கட்டளைகள் நிறுத்தப்பட்டன. ஆனால் இவ்விதமாகத் தள்ளுபடியாகக்கூடியது, சட்டங்கள் மாத்திரமேயன்றி எல்லா வசனங்களுமல்ல. ஒரு காரியம் ஒருதரம் சத்தியமானால் எப்பொழுதும் அது சத்தியமாகவே யிருக்கவேண்டும். தௌறுத்தில் பலிகளைப்பற்றி, அல்லா யூதருக்குக் கொடுத்திருந்த எல்லா விசேஷித்த கட்டளைகளும் நிறுத்தப்பட்டன. மேலும் அவர் தௌறுத்தில் தாம் உலகத்தைச் சிருஷ்டித்ததாகவும், ஆதம் அவ்வா என்பவர்கள் சாத்தானின் வஞ்சனையினால் பாவிகளானார்கள் என்றும், நூகுவின் காலத்தில் வெள்ளம் உண்டாயிற்றென்றும், இபுறுகிம், யூசுவ், மூசா முதலியவர்கள் இன்னின்ன காரியங்களைச் செய்தார்கள் என்றும் சொல்லியிருக்கிறார். இப்பேர்ப்பட்ட சங்கதிகள் ஒருக்காலும் மாற்றப்படக் கூடாது; அவைகள் எப்போதும் சத்தியமாகவே யிருக்

கும். சாத்தான் அவ்வாளைப் பாவஞ்செய்யத் தூண்ட வில்லை யென்றாவது, ஜலப்பிரளயம் நூகுவின் காலத்தி லுண்டாகவில்லை யென்றாவது, யாதொரு புஸ்தகத்தில் எழுதியிருக்கக் காண்போமானால், அந்தப் புஸ்தகம் தௌறாத்துக்கு விரோதமாய்ப் பேசுகிறபடியால், அது தேவ வாக்காயிருப்பது கூடாது என்று தீர்மானிக்க வேண்டும்.

அதேவிதமாய், இஞ்சிலில் கர்த்தராகிய இயேசுகிறிஸ் துவைப்பற்றி, அல்லா அனேகமாய்ப் பேசியிருக்கிறார். எந்தப் புஸ்தகமாவது அதில் எழுதியிருப்பதற்கு விரோ தமாய் ஏதாவதொன்றைச் சொல்லுமானால் அது தேவ வாக்கல்ல. ஏனென்றால் அல்லா ஒருவரே, அவர் எப் போதும் மெய்யே பேசுவார்; அவர் பொய்யும் மெய்யுங் கலந்து பேசமாட்டார்.

இப்போது, குருன் தேவவாக்கு அல்ல என்பதற்கு அனேக அத்தாட்சிகள் காண்பிப்போம்.

1. அனேக விஷயங்களில் குருன் வாக்கியங்கள், தௌறாத், இஞ்சில் வாக்கியங்களுக்கு எதிரிடையாயிருக் கிறது. ஆகையால் குருன், தௌறாத்தையும் இஞ்சிலை யும் அருளின அல்லாவின் வார்த்தை யாகமாட்டாது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மரணத்தைப்பற்றிய சரித்திரத்தை நாம் முக்கியமாய்ப் பரிசோதிப்போமாக.

"அல்லாவின் நபியும், மரியம் பீபியின் குமாரனுமா கிய ஈசா என்னும் மேசியாவை மெய்யாகவே கொலை செய்தோம் என்று, அவர்கள் (யூதர்) சொல்லுகிறார்கள்; வாஸ்தவத்தில் அவர்கள் அவனையல்ல, அவனைப்போ

ன்ற ஒருவனைக் கொலை செய்தார்கள்" என்று நீசா, 4-வது சூராவின் 156-ம் ஆயாத்தில் சொல்லியிருக்கிறது.

குருனின் இந்தப் பாகத்தில், யூதர் இயேசுகிறிஸ்து வைக் கொலை செய்யவில்லையென்று தெளிவாய்ச் சொல்லி யிருக்கிறது. மோல்விகளும் அப்படியே சொல்லுகிறார் கள். அல்லா ஈசாவைப் பரலோகத்துக்கு எடுத்துக் கொண்டு, அவருக்குப் பதிலாக, தோற்றத்தில் அவரைப் போன்ற வேறொரு ஆளை வைத்தார். அப்பொழுது யூதர் அந்த ஆளை ஈசாவென்று எண்ணி, பிடித்துச் சிலுவையில் அறைந்தார்கள் என்கிறார்கள். ஆனால் இஞ்சிலில் தெளிவாக, ஈசா மெய்யாகவே மரித்தார் என்றும், யதார்த்தத்தில் மரிக்கிறதற்காகவே பரலோகத் திலிருந்து வந்தாரென்றும் எழுதியிருக்கிறது. சாபுரில் மேசியாவைப்பற்றி "அவர் தமது ஆத்துமாவை மரணத் தில் ஊற்றிவிட்டார்" (எசா. 53. 12.) என்றும், "மேசியா சங்கரிக்கப்படுவார்" (தானி. 9. 26.) என்றும் சொல்லி யிருக்கிறது. "என்னுடைய இரத்தம் பாவமன்னிப்புக் கென்று அனேகருக்காகச் சிந்தப்படுகிறது" (மத். 26. 28.) என்றும், "நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்," "ஆடுகளுக்காக நான் என் ஜீவ னைக் கொடுக்கிறேன்" (யோவா. 10. 11, 15.) என்றும் இயேசுகிறிஸ்து தாமே சொல்லியிருப்பதாய் இஞ்சில் பேசுகிறது. இஞ்சிலின் அனேக இடங்களில் பின் வருவ தைப்போன்ற வாக்கியங்களைப் பார்க்கலாம். "நீங்கள் மரத்திலே தூக்கிக் கொலை செய்த இயேசுவை, நம்மு டைய பிதாக்களின் தேவன் எழுப்பி, அவரை அதி

பதியாகவும், இரட்சகராகவும், தமது வலது கரத்தினாலே உயர்த்தினார்" (அப். 5. 30, 31.). "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினால் தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணினார்" (ரோம. 5. 8.). "கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்" (1 கொரி. 15. 3, 4.). நான் "ஊழியங்கொள்ளும்படி வாராமல் ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தமது ஜீவனைக் கொடுக்கவும் வந்தேன்" (மத். 20. 28.) என்று கர்த்தராகிய இயேசு தாமே சொல்லுகிறார். இஞ்சிலின் நாலு வெவ்வேறு இடங்களில், அவருடைய மரணத்தைப்பற்றிய வெகு நுட்பமான சரித்திரங்கள் எழுதியிருக்கிறது. இஞ்சில் தேவவாக்கானபடியால் அதிலடங்கிய வசனங்கள் சத்தியமானதாயிருக்கவேண்டும். ஆதலால் அவர் மரிக்கவில்லையென்று குருன் பேசும்போது அது அசத்தியம் பேசுகிறது. அதினாலே அது தேவவாக்காயிருப்பது கூடாது.

2. மோட்சத்தைப்பற்றிக் குருனில் எழுதப்பட்டிருக்கிற சங்கதி, இஞ்சிலில் சொல்லப்பட்டவைகளுக்கு விகற்பப்படுகிறது மன்றி, அனேக விஷயங்களில் நம்பக்கூடாததாயுமிருக்கிறது. மோட்சத்திலே சுத்த ஜல நதிகளும், பால் நதிகளும், திராட்சரச நதிகளும், தேன் நதிகளும் உண்டு என்றும், விசுவாசிகளான முசல்மானர் அங்கே தங்கக் கட்டில்களில் படுத்து, தாங்கள்

விரும்பினமட்டும் சாப்பிடுவார்கள் என்றும், அனேக வித கனிவர்க்கங்களும், அவர்கள் அனுபவிக்கப் போது மான உணவும், இரசமும் உண்டு என்றும், மேலும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் அழகான ஸ்திரீகள் கிடைப்பார்கள் என்றும் எழுதியிருக்கிறது. திராட் சரசம் குடிப்பது பாவம் என்று முகம்மது சொல்லி யிருக்கிறார். மெய்யாகவே அது முகம்மதியருக்கு விலக் கப்பட்டிருக்கிறது. என்றாலும் நீதிமான்கள் மோட்சத் திலே திராட்சரசம் குடிப்பார்கள் என்று குரானில் சொல்லியிருக்கிறது. அப்படியானால் விசுவாசிகள் மோட்சத்தில் பாவஞ் செய்வார்களோ? ஒரு இடத்திலே "திராட்சரசம் குடிப்பது பாவம் என்றும் சாத்தானின் செய்கையென்றும்" வேறொரு இடத்திலே "நீதிமான்கள் அல்லாவின் கட்டளையின்படி திராட்சரசம் குடிப்பார் கள்" என்றும் சொல்லுகிற புஸ்தகம் தேவவாக்காகுமா? மேலும் இஞ்சிலில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து "இந்தப் பிரபஞ்சத்தில் பிள்ளைகள் பெண் கொண்டும் பெண் கொடுத்தும் வருகிறார்கள்; மறுமையையும் மரித்தோரி லிருந்தெழுந்திருக்குதலையும் அடையப் பாத்திரராக எண்ணப்படுகிறவர்களோ பெண் கொள்வதும் இல்லை, பெண் கொடுப்பதும் இல்லை; அவர்கள் இனி மரிக்கவு மாட்டார்கள்; ஏனெனில் அவர்கள் தேவதூதருக்கு ஒப்பானவர்களாயிருப்பார்கள்" (லூக். 20. 34-36.) என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்; ஆகவே நீதி மான்கள் மறுமையில் விவாகம் பண்ணமாட்டார்கள் என்று இயேசுகிறிஸ்து இஞ்சிலில் பேசுகிறார். அவர்கள்

விவாகஞ்செய்வார்கள் என்று குரான் கூறுகிறது. இஞ்சிலின் வார்த்தைகள் உண்மையாயிருக்கிறபடியால் குரானின் வார்த்தைகள் பொய்யாயிருக்கவேண்டும்.

நாம் கவனிக்கவேண்டிய வேறொரு விஷயமாவது:—இவ்வுலகத்துக்கும் மோட்சத்துக்கும் மிகுந்த பேதமுண்டு; மனுஷருடைய குறைவுகளும் விருப்பங்களும் இங்கேயிருப்பதுபோல் அங்கே யிராது. இந்த உலகத்திலே மனிதர் போஜன பானங்களை விரும்புகிறார்கள்; மோட்சத்திலேயோ, அவர்களுக்கு அப்படிப்பட்ட விருப்பமிராது. புசிப்புங் குடிப்பும் விவாகமும் இச்சரீரத்தைச் சேர்ந்த இன்பங்கள். தேகமில்லாமல் போகும்போது அவ்விருப்பங்களும் இராமல் போம். மரணத்துக்குப் பின்பு மனிதனுடைய தேகம் கல்லறையிலே அழுகிப்போகிறது; நியாயத்தீர்ப்பின் நாளில் அது எழுந்திருக்கும் என்றாலும், அந்நாள்வரையும், மரித்தவர்களுக்குத் தேகமிராது. மரித்தவர்களுக்குக் கையும் காலுமில்லை; அவர்கள் வெறும் ஆவிகள். வாயில்லாத ஒருவன் புசித்துக் குடிப்பதெப்படி? தேகமில்லாத ஒருவன் மனைவியோடு வசிப்பதெப்படி? குரான் இஞ்சிலுக்கு விரோதமாயிருப்பது மாத்திரமல்ல; புத்திக்கும் முற்றும் விரோதமாயிருக்கிறது.

3. அநேக விஷயங்களில் குரான் ஆகமத்தின் ஒரு இடத்தில் சொல்லப்பட்டிருக்கிற போதனைக்கும், வேறொரு இடத்தில் சொல்லப்பட்டிருக்கிற போதனைக்கும் வித்தியாசமிருக்கிறது. முக்கியமாக இந்த எதிரிடையான உபதேசங்களை, அவிசுவாசிகளோடு நடந்துகொள்

ளவேண்டிய விதத்தைப்பற்றிப் பேசுமிடத்தில் காண லாம். "மார்க்கவிஷயத்தில் எவ்வளவும் கட்டாயம் பண்ணலாகாது" என்று பாக்கர், 2–ம் சூரா, 257–ம் ஆயாத்தில் சொல்லியிருக்கிறது. "கட்டாயத்தினால் நீங் கள் மனுஷரை விசுவாசிகளாக்கக்கூடுமோ?" என்று யூனுஸ் 10-ம் சூரா 99-ம் ஆயாத்தில் சொல்லியிருக்கிறது. "அவர்களை (அவிசுவாசிகளை) எவ்வளவும் கட்டாயம் பண்ணுதிருங்கள்" என்று காப், 50–ம் சூரா, 44–ம் ஆயாத்தில் கண்டிருக்கிறது. ஆனால் இதற் கெதிரிடை யாய், "அவர்களுடன் சண்டை செய்யுங்கள்" என்று அன்பால், 8–ம் சூரா, 40–ம் ஆயாத்தில் எழுதியிருக்கி றது. மேலும் "விசுவாசிகளானவர்கள் அல்லாவின் மார்க்கத்துக்காக யுத்தம் பண்ணுவார்கள்" என்று நீசா, 4–ம் சூரா, 78–ம் ஆயாத்தில் பேசியிருக்கிறது. இவ்விரு வகையான கட்டளைகளும் ஒன்றுக்கொன்று விரோதப் படுகிறதல்லவா? ஆகையால் இவைகளில் ஒன்று நல்ல தானால், மற்றது கெட்டது என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். மோல்விகளோ முந்தின வகைக் கட்டளை பிந்தினதாலே தள்ளுபடியாயிற்று என்கிறார்கள். ஆனால் குருன் ஒரே புஸ்தகமாயிருப்பதால், இவ்விருவகை விதிகளில் முந்தி அருளப்பட்டதெது? பிந்திக் கொடுக் கப்பட்டதெது? எதைக் கைக்கொள்ளவேண்டும்? எதைத் தள்ளிப்போடவேண்டும்? என்பதை நாம் அறிவதெப் படி? ஒரு புஸ்தகத்தின் ஓர் பாகம் இன்னோர் பாகத் துக்கு விரோதப்படுமாயின், அந்தப் புஸ்தகம் மெய்த் தேவனுடைய வாக்காகமாட்டாதே.

4. குருனில் சேனுபைப்பற்றி எழுதியிருப்பது தேவவாக்காகாது. சேனுப் என்பவள், முகம்மதுவின் சுவிகார புத்திரனுகிய சையதுவின் மனைவி. அல்லாவின் பிரமாணத்தின்படிக்கு முகம்மது அவளை விவாகம் பண்ணி யிருக்கக்கூடாது. ஆனுல் ஒருநாள் முகம்மது திடீரென சையதுவின் வீட்டுக்குள் போனபோது, லேசான உடை தரித்திருந்த சேனுபைக் கண்டவுடன், அம்மாதுவை தனக்குக் கொள்ளவேண்டுமென்ற ஆசை அவர் இருதயத்தில் உதித்தது. அப்புறம் சையது அவளை நீக்கிவிடவே, முகம்மது தன் சுவிகார புத்திரனின் மனைவியை மணம்புரிந்துகொண்டார். ஆகவே மற்ற மனுஷரைப்போல, முகம்மதுவும் பாவிதான் என்று இது தெளிவாகக் காண்பிக்கிறது. ஆகையால் எவ்விதத்திலும் அவர் நம்முடைய இரட்சகராகமாட்டார். முகம்மது இப்படிச் செய்த விசேஷம் எங்கும் பரம்பவே, அநேகர் அவரை வெறுத்தார்கள். அதினுல் அவர் குருனில் (ஆசாப், 33–ம் சூரா, 37–ம் ஆயாத்து) "மேலும் அல்லாவின் அருள்பெற்றவனும், உன்னுடைய தயவு பெற்றவனுமானவனை நோக்கி, உன் மனைவியை நீயே வைத்துக் கொண்டு அல்லாவுக்குப் பயந்திரு என்று நீ சொல்லும் போது, அல்லாவானவர் வெளியாக்கவேண்டுமென்று தீர்மானித்திருந்ததை நீ உன் மனதிலே மறைத்துவைத்திருந்தாய் என்பதை நினை. நீ மனிதருக்குப் பயப்பட்டாய்; ஆனுல் அல்லாவுக்குப் பயப்படுவதே நியாயம்; என்றுலும் சையது என்பவன் அவள் காரியத்தைத் தீர்மானித்து, அவளைத் தள்ளிவிட நிர்ணயஞ் செய்துபோட்

டதால், அவளை உன்னோடு விவாகத்தால் இணைத்துவிட்டோம்'' என்று சொல்லியிருக்கிறார். யதார்த்த மென்ன வென்றால், முகம்மது தன் இச்சையினாலே ஏவப்பட்ட போதிலும், முதலில் இந்தத் தீமையைச் செய்யப் பயந்தார். என்றாலும், பின்பு அந்த இச்சைக்கு இடங்கொடுத்து, குரானில் இந்த ஆயாத்தை எழுதி, தேவகட்டளைப் படியே தான் நடந்ததாகச் சொன்னார். இச்சையினால் ஏவப்பட்டு அவர் செய்ததற்கு, தேவகட்டளையை முகாந்தரமாகச் சொன்னார். இது எப்படி அல்லாவின் வாக்கு ஆகும்? தேவன் ஒருக்காலும் தீமைக்கு இணங்குகிறவரல்ல. ஆகையினாலே அல்லாவானவர் தீமையான ஓர் செயலை ஒப்புக்கொண்டார் என்பதாக எழுதியிருக்கப் பட்ட குரான், தேவவாக்காகமாட்டாது.

5. நாம் சொல்லவேண்டிய வேறொரு குறிப்பு: குரான் போதனையின்பிரகாரம், முசல்மானர் தங்கள் மனைவிகளைத் தங்களுக்கு இஷ்டமானபொழுது தள்ளிவிடலாம். ஆனால் இஞ்சிலில், அப்படித் தள்ளிவிடுதல் தேவசித்தத்துக்கு விரோதம் என்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெகு தெளிவாகப் பேசுகிறார்; தௌறுத்தின்பிரகாரம் தள்ளுதல் சீட்டுக் கொடுக்கலாம் என்பது மெய்யே; என்றாலும் இவ்விஷயத்தைப்பற்றி இயேசு கர்த்தாவின் போதனை பின்வருமாறு.—“புருஷனானவன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலாகிலும் தள்ளிவிடுவது நியாயமா? என்று பரிசேயர் அவரைக் கேட்டார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக, தேவன் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கி, இதினி

மித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதை நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படியிருக்கிறபடியினால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருப்பார்கள்; ஆகையினால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார். அதற்கு அவர்கள்: அப்படியானால், தள்ளுதல் சீட்டைக் கொடுத்து, அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே ஏன் கட்டளையிட்டார் என்றார்கள். அதற்கு அவர், உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று, உங்கள் இருதயக் கடினத்தினிமித்தம், மோசே உங்களுக்கு இடம் கொடுத்தார்; ஆதிமுதலாய் அப்படி யிருக்கவில்லை. ஆதலால், எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ் செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம்பண்ணினால், அவன் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான்; தள்ளிவிடப்பட்டவளை விவாகஞ் செய்கிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத். 19.3-9.). இஞ்சில் தேவவாக்கு; ஆகையினாலே தேவசித்தப்படிக்கு விபசாரந் தவிர வேறெந்தக் குற்றத்துக்காகவும், ஒரு மனைவியைத் தள்ளிவிடக்கூடாது என்பதைக் கட்டாயமாய் நாம் ஒப்புக்கொள்ளவேண்டியது. இப்படியிருக்க, வேறு முகாந்தரங்களையிட்டும் தள்ளிவிடுவது தேவசித்தந்தான் என்பதாகக் குரான் சொல்லுகிறபடியால், அது தேவவாக்காகமாட்டாது. மேலும் இஞ்சிலின்

வாக்கியப்படிக்கு, முகம்மது என்பவர் தானும், சையது என்பவனால் தள்ளப்பட்ட மனைவியை விவாகம் பண்ணினதால் விபசாரஞ்செய்தார்.

6. தேவவசனம் மனுஷருக்கு இரட்சிப்பின் வழியை வெளிப்படுத்துகிறது. தௌறாத், சாபூர், இஞ்சில் ஆகியவைகளில் அவர் ஒரே வழியை காண்பித்திருக்கிறார்; அந்த வழி இஞ்சிலில் மிகவும் தெளிவாய்க் காட்டப்பட்டிருக்கிறது மெய்யே. என்றாலும், தௌறாத்தில் காட்டப்பட்ட வழி, இஞ்சிலில் காட்டப்பட்ட வழிக்கு விகற்பப்படாமல், அதற்கு இசைந்திருக்கிறது. இருளில் ஒரு பாதையானது துலக்கமாய்த் தெரிகிறதில்லை, சூரியன் உதயமாகும்பொழுதே அது வெகு தெளிவாய்த் தெரியும்; ஆனால் பாதை ஒன்றே. அதேபிரகாரம் தௌறாத்தில் இரட்சண்ய வழியானது அற்ப சொற்பமாய் வெளிப்படுத்தப்பட்டது. இஞ்சிலில் அது வெகு தெளிவாய் வெளிப்பட்டது. என்றாலும் வழி ஒன்றே. ஆனால் குருனில் வெளிப்படுத்தப்பட்ட வழியோ, இஞ்சிலில் வெளிப்படுத்தப்பட்ட வழிக்குச் சற்றும் இசைகிறதில்லை. ஆகவே அது தேவவாக்கல்ல. குருனின் போதனை இது.—மனுஷன் தன்னுடைய சொந்த நீதியினாலே இரட்சிப்படையலாம்; பாவத்துக்காகப் பிராயச்சித்தப் பலி வேண்டியதில்லை; பாவமன்னிப்பைப் பெறுவதற்கு, பிராயச்சித்தம் தேவையில்லை, மனந்திரும்புதலே போதுமானது. நியாயத்தீர்ப்பின் நாளில், ஒரு மனுஷன் செய்த நன்மையும் தீமையும் தராசின் தட்டிலே வைத்து நிறுக்கப்படும்; தீமையைவிட நன்மை அதிகமாயிருக்கப்

பட்டவன் மோட்சத்துக்குப் போவான்; நன்மையை விட தீமை அதிகமாய் இருக்கப்பட்டவன் நரகத்துக்குப் போவான். இது சரியல்ல; எப்படியென்று கவனிப் போம். தன் ஜீவகாலமெல்லாம் மெத்த யோக்கியமாய் நடந்துவந்த ஒரு மனிதன் கடைசியில் ஒரு கொலே செய் கிருன்; நியாயாதிபதிமுன் கொண்டுபோகப்பட்டபொ ழுது அவன் "ஐயா, நான் இந்த ஒருதடவை மாத்திரம் குற்றஞ்செய்தேன்; என்னுடைய முந்தின எல்லா நல் நடத்தைக்காகவும் என்னே விடுதலே பண்ணுங்கள்" என்கிருன். நியாயாதிபதி அவனே விடுதலே பண்ணு வாரா? விடுதலே பண்ணவேமாட்டார். அந்த ஒரே குற்றத்துக்காக அவன் தூக்கில் போடப்படுவான் அல் லவா? அதேபிரகாரமாய் நாம் தேவனுடைய எல்லாப் பிரமாணங்களேயும் கைக்கொள்ளவேண்டும். ஒரே ஒரு தரம் நாம் குற்றஞ்செய்தபோதிலும் அதற்குரிய தண்ட னேயைப் பெறவேண்டும்; நாமோ அல்லாவுக்கு விரோத மாய் ஆயிரக்கணக்கான தப்பிதங்களேச் செய்திருக்கி ருேம். ஆகையினுலே நம்முடைய நற்கிரியைகளினுல் நாம் இரட்சிப்படைய நிீனப்பது கூடாது. இப்படியாக மனுஷன் எண்ணிறந்த வழியாய்ப் பாவஞ்செய்து, தன் னுடைய புண்ணியத்தினுலே இரட்சிப்படையக் கூடாத வனுய்ப் போய்விட்டான்; இயேசுகிறிஸ்துவினுலே மாத் திரம் இரட்சிப்புக் கிடைக்கும். நம்மை இரட்சிப்பதற் காக அவர் பரலோகத்திலிருந்து வந்தார். அவரிடத்தில் யாதொரு பாவமுமில்லே; என்ருலும் அவருடைய மர ணத்தினுலே நம்முடைய மீறுதல்களுக்குப் பாவ நிவா

ரணமுண்டாக்கும்படிக்கு அவர் மரித்தார்; பாவிகளுக்குப் பிரதிநிதியாக (அதாவது பதிலாளாக) பாவத்துக்குரிய தண்டனையைத் தாமே சகித்தார்; ஆகையினால் அவர் பாவத்துக்கு நிவாரணம்பண்ணினார்; அவரை விசுவாசிக்கிறவன் எவனும், அந்தப் பிராயச்சித்தத்தின் மூலமாய், பாவ மன்னிப்பைப் பெறுவான்; மேலும் தேவன் பரிசுத்தஆவியானவரை அனுப்புகிறார். அவர் விசுவாசிகளின் இருதயத்தில் வாசம்பண்ணி அவர்களைப் பரிசுத்தம் பண்ணுகிறார். அவருடைய ஒத்தாசையினாலே நாமும் பரிசுத்தராகலாம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூன்றாம்நாள் கல்லறையை விட்டெழுந்து, அப்புறம் பரலோகத்துக்குத் திரும்பிப் போனார். அங்கேயிருந்து விசுவாசிகளுக்காக எப்பொழுதும் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார்; முடிவிலே அவர்களைச் சாத்தானுடைய வல்லமையினின்றும் விடுவித்து, மோட்சத்துக்கு எடுத்துக்கொள்ளுவார். சுருக்கமாய்ச் சொல்லில், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தால், அவருடைய பிராயச்சித்த பலியின் மூலமாய் நாம் இரட்சிக்கப்படுவோம் என்று இஞ்சில் போதிக்கிறது; குரான் இதற்கு ஒத்துவருகிறதில்லை யாதலால் அது தேவவாக்காகமாட்டாது.

சகோதரரே, குரானைத் தூர வைத்துவிட்டு இஞ்சிலை ஏற்றுக்கொள்ளுங்கள்; ஏனெனில் இரட்சண்யவழி இதிலேமாத்திரம் காட்டப்பட்டிருக்கிறது.

S. P. C. K. Press, Vepery, Madras—1897.

THE KORAN.

குரான்.

கிறிஸ்தவர்களும் முகம்மதியரும் தௌறாத், சாபூர், இஞ்சில் ஆகிய ஆகமங்கள் அல்லாவின் வாக்கு என்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். முகம்மதியர் குரானும் தேவ வாக்கு என்கிறார்கள். கிறிஸ்தவர்களோ இதை ஒப்புக்கொள்வதில்லை; இவ்விஷயத்தைச் சற்றுப் பரிசோதிப்போமாக.

குரானிலிருந்து அநேக நல்ல போதனைகளை அடையலாம் என்பதை ஒத்துக்கொள்ளுகிறோம். தெய்வம் ஒன்று; விக்கிரக ஆராதனை பாவம்; தேவனிடத்தில் விசுவாசம் வைப்பது அவசியம்; கடைசிநாளில் எல்லா மனுஷருக்கும் நியாயத்தீர்ப்பு உண்டு, அப்போது விசுவாசிகள் மோட்சத்துக்கும், துன்மார்க்கர் நரகத்துக்கும் போவார்கள் என்பதைப்போலொத்த சத்தியங்கள் குரானில் அடங்கியிருக்கிறது. காரியத்தைப் பார்த்தால் இந்த எல்லா நல்ல போதனைகளும் தௌறாத், சாபூர், இஞ்சில் என்னும் ஆகமங்களிலிருந் தெடுக்கப்பட்டன.